# அன்னை மாமரி எங்கள் அன்பின் தாய்மரி

அன்னை மாமரி எங்கள் அன்பின் தாய்மரி
என்றும் உந்தன் புகழைப் பாடுவோம்
தேடும் மாந்தரை தேற்றிக் காத்திடும்
உந்தன் அருள் வரங்கள்
எங்கும் தேடினோம்

**1**
எண்ணிறைந்த உதவிகளை
பெற்றுத் தந்த நீர்
எங்கள் வாழ்வில் உடனிருந்து
காத்து வருகிறாய்
நன்றிப் பூக்கள் ஒன்று சேர்ந்து
உந்தன் பாதத்தில்
மருதமடுத் தாய் மரியே எம்மை அரவணைத்து காப்பாய் நீயே

**2**
அண்ணல் யேசு அன்பின் வழி
கற்றுத் தந்த உம்
அன்பு மிகு ஆதரவில் அச்சம் நீங்குதே
நன்றிப் பூக்கள் ஒன்று சேர்ந்து
உந்தன் பாதத்தில்
மருதமடுத் தாய் மரியே எம்மை அரவணைத்து காப்பாய் நீயே